1982 மார்ச் 19]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல கல்லூரிகளில் மாணவர்களின் தேர்வுகளில் தரம் குறைந்து கொண்டு வருகிறது. ஆசிரியர்களை மிரட்டி பல கல்லூரிகளில் புத்தகங்களை வைத்துக் கொண்டு தேர்வுகள் எழுதுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகத்தின் தரத்தைக் குறையாமல் பாதுகாக்க கடுமையாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால் கல்லூரித் தலைவர்கள் அந்தச் செயல்களுக்காக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி எடுக்கும் போது அரசு அவர்கள் பக்கம் இருக்கும்.

மாஞ்சோலை எஸ்டேட் பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான ஹில் அலவன்ஸ்.

*வினா எண் 556—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஹில் அலவன்ஸ் கேட்டு கோரிக்கை எதுவும் அரசுக்கு வந்தனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களுக்கு ஹில் அலவன்ஸ் கேட்டு கோரிக்கை எப்பொழுது வந்தது? இந்த ஆய்வு முடிந்து எப்பொழுது அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அலவன்ஸ் வழங்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதித்துறையின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது அது வந்தவுடன் கல்வித்துறை உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாஞ்சோலை எஸ்டேட்டில் இருக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அங்கே தனியாக வீடுகட்ட வாய்ப்பு இல்லை. காரணம் பம்பாய்-பர்மா டிரேடிங் கார்ப்பரேஷனிடத்தின் நிலம்தான் இருக்கிறது. தனியாக நிலம் இல்லை. அந்தக் கம்பெனி விரும்பினால்தான் ஏதாவது வீடு கொடுப்பார்கள். அப்பொழுது தங்க முடியும்: இல்லையென்றால் தங்கவே முடியாது. பக்கத்தில் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் கல்லிடைக்குறிச்சி ஊர் இருக்கிறது. அவர்கள் கேட்பது நியாய மான கோரிக்கை. இந்த இடத்தைவிட உயரம் குறைவாக உள்ள மற்ற சில இடங்களில்கூட இந்த அலவன்ஸ் கொடுக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே கூடிய விரைவில் இங்கே அந்த ஹில் அலவன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது மாஞ்சோலை எஸ்டேட் பயணப்படி வழங்குவதற்காக மலை வாசஸ்தலம் என்று குறிப்பிடப்படுகிறது. ஹில் அலவன்ஸ் கொடுப்பதற்காக குறிப்பிடப்படவில்லை. அதைத் தான் அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. பரிசீலனை முடிந்த உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டம் பெற்ற சிறைக் கைதிகளுக்கு விடுதலைக்குப் பிறகு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் திட்டம்.

*வினா எண். 557—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள மத்திய சிறைச்சாலையில் தண்டனை பெற்ற கைதிகள் தண்டனை காலத்தில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு விடுதலைக்குப் பிறகு அவர்களை அரசு பணிகளில் சேர்ப்பதற்கு அரசு முன் உரிமை வழங்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.